**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை திரு.எம்.பொன்பாண்டி, பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர், பழனி**

**2057 திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ பராபவ வருடம் ஆடி மாதம் 6ம் நாள்**
**2026ம் வருடம் ஜூலை திங்கள் 22ம் நாள் புதன்கிழமை**

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.190/2019

அரசுக்காக – காவல் சார்பு ஆய்வாளர்,
பழனி தாலுகா கா.நி.கு.எண்.580/2018 **... குற்றமுறையீட்டாளர்**

/எதிர்/

1. கோபால்சாமி, 62/2018
த/பெ.சங்கரப்பகவுண்டர்,
1A, தெற்கு வீதி, 17வது வார்டு,
பொன்னாபுரம், பழனி,
திண்டுக்கல் மாவட்டம்.

2. அருண், 33/2018
த/பெ.கோபால்சாமி,
17வது வார்டு, பொன்னாபுரம்,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம்.

3. முத்துலட்சுமி, 53/2018
க/பெ.கோபால்சாமி,
17வது வார்டு, பொன்னாபுரம்,
பழனி வட்டம், திண்டுக்கல் மாவட்டம். **... எதிரிகள்**

இவ்வழக்கு 02.02.2019 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் வரப்பெற்று முறையீட்டாளருக்காக அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2 திரு.B.பார்த்திபன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பார்த்தசாரதி அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும் கேட்டு சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் பின்வரும் ....

## தீர்ப்புரை

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு** –

இவ்வழக்கின் வாதியான பொன்னாபுரத்தை சேர்ந்த அய்யன்சாமியின் தந்தை நாச்சிமுத்து தனது பூர்வீக சொத்தை தனது மகன்களான வாதி மற்றும் உடன்பிறந்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்துள்ளதாகவும், வாதிக்கு பகிர்ந்து கொடுத்த சொத்தின் சர்வே எண் மாறியுள்ளதாகவும், மாறியுள்ள சர்வே எண்ணை மாற்றி தருவதாக வாதியிடம் எழுதி வாங்கிய சொத்தை, வாதியின் தந்தை, வாதிக்கு

தெரியாமல் எதிரிக்கு எழுதி கொடுத்ததால் மேற்படி சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவதாகவும், கடந்த 22.10.2018ம் தேதி 12.15 மணிக்கு வாதி, தனது மனைவி பூமதி, மாமனார் கருப்புச்சாமி ஆகியோருடன் மேற்படி சொத்தில் உழுது வேலை செய்து கொண்டிருந்தவர்களை எதிரிகள் மூவரும் ஏற்கனவே உள்ள முன்பகையை மனதில் கொண்டு அசிங்கமாக பேசி, 1, 2 எதிரிகள் வாதி வைத்திருந்த தடியை பிடுங்கி தடியால் வாதியை அடித்து கீழே தள்ளி, 1ம் எதிரி தான் வைத்திருந்த தடியால் வாதியை மீண்டும் தாக்க வந்ததாகவும், அதை தடுத்த வாதியின் மனைவி பூமதியை இடது உள்ளங்கையில் தாக்கி இருவருக்கும் சிறுகாயத்தை ஏற்படுத்திவிட்டு, எதிரிகள் மூவரும் இனிமேல் தோட்டத்திற்குள் வந்தால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாகவும், எனவே, 1, 2 எதிரிகள் இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழும், 3ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழும் குற்றம் புரிந்துள்ளதாக 1 முதல் 3 எதிரிகள் மீது பழனி தாலுகா காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. 1 முதல் 3 எதிரிகள் இந்நீதிமன்றத்திலிருந்து பிரிவு 204 கு.வி.மு.ச.வின் கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் குவிமுச பிரிவு 207ன் கீழ் 1 முதல் 3 எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

3. ஆலோசனை செய்ய அவகாசம் கொடுக்கப்பட்ட பின்னர் 1 முதல் 3 எதிரிகளிடம் குற்றம் குறித்து வினவியபோது அவர்கள் குற்றத்தினை மறுத்துள்ளார்கள், இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்த பின்னர் இந்நீதிமன்றம் பிரிவு 240(1) கு.வி.மு.ச.வின் படி 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323(2 எண்ணிக்கை), 506(1)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழும், 3ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனைந்து, அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் கீழ் அதனை விளக்கி வினவியபோது அவர்கள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று மறுத்துரைத்தார்கள். எனவே, அரசு தரப்பு சாட்சியங்களை விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது.

4. இந்த வழக்கில் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான குற்றங்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு –</u>

கடந்த 2018ம் வருடம் பழனி நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 22.10.2018ம் தேதி 15.00 மணிக்கு பழனி நகர் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது பழனி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அயன்சாமி என்பவரை விசாரித்து கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் பதிவு செய்து அன்றே 15.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய பழனி நகர் காவல்நிலைய கு.எண்.580/2018 பிரிவுகள் 294(b),323,506(1) இ.த.ச பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 பதிவு செய்து, அசல் புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் இணைத்து பழனி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்து, பின்பு புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 22.10.2018ம் தேதி 17.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மயில்சாமி, துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வைமகஜர் தயார் செய்து அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் வரைந்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றும், அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்பு பட்டியல் சாட்சிகள் அயன்சாமி, பூமதி, கருப்புச்சாமி, அனுபிரியா ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, பின்னர் எதிரிகளை தேடி வந்த நிலையில் 22.10.2018ம் தேதி 18.00 மணிக்கு பழனி பஸ் நிலையம் திண்டுக்கல் ரேக் அருகில் இருந்த எதிரி கோபால்சாமி என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து உச்ச நீதிமன்ற கட்டளையை கடை பிடித்து 18.30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து திரேக சோதனை செய்து பாராவசம் ஒப்படைத்து பின்பு தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, மேலும் காயம்பட்ட அயன்சாமி, பூமதி ஆகியோருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் முகைதீன் நெளசத் கனி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 விபத்து பதிவேடு உ/இ காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து,

பட்டியல் சாட்சி 1, 2 க்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என காயச் சான்றளித்து, எதிரிகள் அருண் மற்றும் முத்துலட்சுமி முன்பிணை பெற்றதால் கைது செய்யப்படவில்லை. பின்பு வழக்கின் விசாரணை முடித்து 1,2 எதிரிகள் மீது பிரிவுகள் 294(b),323,506(1) இ.த.சவின் கீழ் , 3ம் எதிரி மீது 294(b),506(1) இ.த.சவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் முடிவுற்றது.

6. அரசு தரப்பு சாட்சிய விசாரணை முடிவுற்றவுடன் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் அடிப்படையில் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான சங்கதிகளை 1 முதல் 3 எதிரிகளிடம் கூறி அது சம்பந்தப்பட்ட பகுதிகளை விளக்கி கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரிகள் பொய்சாட்சி என்று கூறினார்கள். 1 முதல் 3 எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா? என்று வினவிய போது, 1 முதல் 3 எதிரிகள் சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே, 1 முதல் 3 எதிரிகள் தரப்பு முடிக்கப்பட்டது.

7. பின்னிட்டு இருதரப்பு வாதுரைகளும் கேட்கப்பட்டன. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள், இரு தரப்பு வாதுரைகள் ஆகியவற்றை பரிசீலித்த பின்னர் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323(2 எண்ணிக்கை), 506(1)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழும், 3ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டுக்களானது அரசு தரப்பால் தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிருபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதேயாகும்.

<u>8. அரசு தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்</u> –

எதிரிகள் மூவரும் அசிங்கமாக பேசி, 1, 2 எதிரிகள் வாதியை அடித்து கீழே தள்ளி, 1ம் எதிரி வாதியை மீண்டும் தாக்க வந்தபோது தடுத்த வாதியின் மனைவி பூமதியை இடது உள்ளங்கையில் தாக்கி இருவருக்கும் சிறுகாயத்தை ஏற்படுத்தி, எதிரிகள் மூவரும் கொலைமிரட்டல் விடுத்த செயலானது அ.சா.1 முதல் அ.சா.5 ஆகிய சாட்சிகளின் மூலமும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் மூலம் எல்லா தகுநிலை ஐயப்பாட்டிற்கு அப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**9. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பின்வருமாறு வாதிட்டார்** –

எதிரிகள் மூவரும் அசிங்கமாக பேசி, 1, 2 எதிரிகள் வாதியை அடித்து கீழே தள்ளி, 1ம் எதிரி வாதியை மீண்டும் தாக்க வந்தபோது தடுத்த வாதியின் மனைவி பூமதியை இடது உள்ளங்கையில் தாக்கி இருவருக்கும் சிறுகாயத்தை ஏற்படுத்தி, எதிரிகள் மூவரும் கொலைமிரட்டல் விடுத்த செயலானது அரசு தரப்பு சாட்சிகளின் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, புலன் விசாரணை அதிகாரி சம்பவயிடம் சென்று முறையான புலன் விசாரணை செய்யாமலேயே 1, 2, 3 எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, 1, 2, 3 எதிரிகளுக்கு எதிரானக் குற்றங்கள் எவ்வகையிலும் நிரூபிக்கப்படவில்லை என முடிவு செய்து 1, 2, 3 எதிரிகளை இந்த வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**10. தீர்வு** –

இவ்வழக்கின் வாதியான பொன்னாபுரத்தை சேர்ந்த அய்யன்சாமியின் தந்தை நாச்சிமுத்து தனது பூர்வீக சொத்தை தனது மகன்களான வாதி மற்றும் உடன்பிறந்தவர்களுக்கு பகிர்ந்து கொடுத்துள்ளதாகவும், வாதிக்கு பகிர்ந்து கொடுத்த சொத்தின் சர்வே எண் மாறியுள்ளதாகவும், மாறியுள்ள சர்வே எண்ணை மாற்றி தருவதாக வாதியிடம் எழுதி வாங்கிய சொத்தை, வாதியின் தந்தை, வாதிக்கு தெரியாமல் எதிரிக்கு எழுதி கொடுத்ததால் மேற்படி சொத்து சம்மந்தமாக பிரச்சனை இருந்து நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவதாகவும், கடந்த 22.10.2018ம் தேதி 12.15 மணிக்கு வாதி, தனது மனைவி பூமதி, மாமனார் கருப்புச்சாமி ஆகியோருடன் மேற்படி சொத்தில் உழுது வேலை செய்து கொண்டிருந்தவர்களை எதிரிகள் மூவரும் ஏற்கனவே உள்ள முன்பகையை மனதில் கொண்டு அசிங்கமாக பேசி, 1, 2 எதிரிகள் வாதி வைத்திருந்த தடியை பிடுங்கி தடியால் வாதியை அடித்து கீழே தள்ளி, 1ம் எதிரி தான் வைத்திருந்த தடியால் வாதியை மீண்டும் தாக்க வந்ததாகவும், அதை தடுத்த வாதியின் மனைவி பூமதியை இடது உள்ளங்கையில் தாக்கி இருவருக்கும் சிறுகாயத்தை ஏற்படுத்திவிட்டு, எதிரிகள் மூவரும் இனிமேல் தோட்டத்திற்குள் வந்தால் கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு சென்றதாகவும், எனவே, 1 முதல் 3

எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் மனு கொடுத்ததாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது.

11. அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 22.10.2018ம் தேதி மதியம் சுமார் 12.15 மணிக்கு தானும், தனது மனைவி பூமதியும் சம்பவ இடமான இடத்திற்கு உழவு ஓட்டுவதற்காக சென்றபோது கோபால்சாமி, அவரது மனைவி, அவரது மகன் ஆகியோர் அங்கு வந்து தான் உழவோட்டிக்கொண்டிருந்ததை தடுத்து கோபால்சாமி என்பவர் தன்னை மூக்கிலும், வாயிலும் அடித்ததில் தனக்கு மூக்கிலும், இடது தோள்பட்டையிலும், வாயிலும் இரத்த காயம் ஏற்பட்டு ரத்தம் வடிந்ததாகவும், தனது மனைவியை கோபால்சாமி கையில் வைத்திருந்த கத்தியால் குத்தி கையை கிழித்துவிட்டதாகவும், தனது மனைவியை நெஞ்சிலும், பிறப்புறுப்பிலும் எட்டி உதைத்ததில் தனது மனைவியால் நடக்கவே முடியவில்லை என்றும், எதிரிகளுக்கும், தனக்கும் என்ன பிரச்சனை என்றால் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனது அப்பா நாச்சிமுத்து கவுண்டர் தன்னிடம் எனக்கு தெரியாமல் கையெழுத்து பெற்று எதிரிகளுக்கு விற்றுவிட்டது சம்மந்தமாக பிரச்சனை நடந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

12. அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 22.10.2018ம் தேதி மதியம் சுமார் 12.00–12.30 மணியளவில் தானும், தனது கணவர், தனது அப்பா ஆகியோர் தாங்கள் அனுபோகத்தில் வைத்திருந்த உழவு காட்டிற்கு சென்றபோது ஏர் ஓட்டுவதற்காக மாட்டு வண்டிகளை வாடகைக்கு எடுத்து வந்திருந்ததாகவும், அப்போது அவர்கள் உழவோட்டிக்கொண்டிருந்த போது முத்துலட்சமி மற்றும் அவரது கணவர் கோபால்சாமி ஆகியோர் வந்தார்கள் என்றும், வந்ததும் கோபால்சாமி உழவோட்ட வந்திருந்தவர் வைத்திருந்த குச்சியை பிடுங்கி என்ன ஏது என்று கேட்காமல் தனது கணவர் அய்யன்சாமி அவர்களை அடித்ததாகவும், தான் அதை தடுப்பதற்காக போன போது கையில் என்ன வைத்திருந்தார் என்று தெரியவில்லை என்றும், தன்னுடைய இடது கையில் கிழித்துவிட்டதாகவும், மேலும் அவர் அந்த தடியால் தன்னுடைய தொடையில் அடி அடி என அடித்துவிட்டதில் தன்னால் நடக்கவே முடியவில்லை என்றும், தன்னுடைய கணவரை மூக்கு மற்றும் வாயில் கோபால்சாமி அடித்ததில் தனது

கணவருக்கு இரத்தமாக வந்து கொண்டிருந்ததாகவும், அடித்து கொண்டிருந்த போது தான் கோபால் சாமியின் மகன் அருண் அங்கு வந்ததாகவும், தான் அந்த சமயத்தில் வைத்திருந்த செல்போனை தான் வீடியோ எடுத்துவிடுவேனோ என நினைத்து கோபால் சாமி என்னிடமிருந்து பிடுங்கி கொண்டதாகவும், அதை தரவில்லை என்றும், சம்பவத்தின் போது எதிரிகள் கோத்தா, அவளே, இவளே அத மூடுடி என்று பேசியதாகவும், தன்னுடைய கணவருடைய சட்டை வேட்டி எல்லாம் இரத்ததால் நனைந்து விட்டதாகவும், தனது கணவர் மூச்சு பேச்சு இல்லாமல் கிடந்ததாகவும், தான் அவரை எழுப்புவதற்காக போன போதும் தன்னை அடித்ததாகவும், தனது அப்பா தடுக்க வந்த போது அவரை கோபால் சாமி மற்றும் முத்துலட்சுமி ஆகிய இருவரும் சேர்ந்து அடித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

13. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 22.10.2018ம் வருடம் சுமார் 11–12 மணியளவில் தங்களது தோட்டத்தில் வைத்து சம்பவம் நடந்த இடத்தில் ஆய்வாளர் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தபோது தானும், தனது அண்ணன் துரைராஜ் என்பவரும் இருந்ததாகவும், கோபால் சாமியும், அவரது மனைவியும் நிலத்தகராறு தொடர்பாக அய்யன் சாமியையும், அவரது மனைவியையும் அடித்ததாகவும், அப்போது அய்யன் சாமியையும், அவரது மனைவியையும் சம்பவத்தன்று சம்பவ இடத்தில் மயங்கி கிடந்ததாகவும், தான் 108க்கு தகவல் சொல்லி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14. இந்த வழக்கில் எதிரிகள் அ.சா.1 தரப்பினரை அசிங்கமாக பேசி, அடித்து காயப்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. அ.சா.1 தனது நிலத்தில் உழுது கொண்டிருந்தபோது எதிரிகள் வந்து பிரச்சனை செய்ததாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அ.சா.1ன் தகப்பனார் நாச்சிமுத்து கவுண்டர் என்பவர் எதிரிகள் தரப்புக்கு சொத்துக்களை விற்பனை செய்துவிட்டார் என்பது அ.சா.1ன் முதல் விசாரணை சாட்சியத்திலேயே தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அ.சா.1ன் குறுக்கு விசாரணையில் அ.சா.1 ஆனவர் தனது தகப்பனார் மீதும் 1ம் எதிரி கோபால்சாமி மீதும் பழனி மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து, அந்த வழக்கு 2022ம் ஆண்டு 1ம் எதிரிக்கு

ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்பதை தெளிவாக ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் காவல்துறையினரை அணுகிய போது தீர்ப்பு வரும் வரை உழவு ஓட்டிக்கொள்ளலாம் என்று காவல்துறையினர் சொன்னதால், உழவு ஓட்டிக்கொண்டோம் என்று அ.சா.1 சொல்லியிருக்கும் விபரம் சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. ஏனென்றால் ஒரு நிலம் சம்பந்தமான அனுபவ விவரங்கள் மற்றும் அனுபவ உரிமைகளை ஒரு உரிமையியல் நீதிமன்றத்தால் மட்டுமே முடிவு செய்ய இயலும்.

15. அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4ல் சம்பவமானது 12.15 மணிக்கு நடந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பூமதி மருத்துவமனையில் சேர்ந்து நேரம் மதியம் 01:50 மணி என்றும், அ.சா.ஆ.4ல் அய்யன்சாமி மருத்துவமனையில் சேர்ந்த நேரம் மதியம் 02.00 மணி என்றும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. 12.15 மணியிலிருந்து மதியம் 2-3 மணிவரை சம்பவம் நடந்தது என்று அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள விவரத்தை வைத்து பார்க்கும் போதும், அ.சா.2ன் முதல் விசாரணையில் சம்பவத்தின் போது தாங்கள் தோட்டத்திற்கு பக்கத்தில் இருந்த அனுப்பிரியா, ரேவதி, அம்சா, மயில்சாமி, வெள்ளைத்தாய், துரைராஜ் ஆகியோர்கள் வந்துவிட்டார்கள் என்று சாட்சியமளித்துள்ள சங்கதியை பார்க்கும் போதும் மதியம் 2-3 மணி வரை சம்பவம் நடந்துள்ளது என்று சொல்வதில் ஒரு தகுநிலை சந்தேகம் ஏற்படுகிறது.

16. அ.சா.2ன் குறுக்கு விசாரணையில், தனது அப்பா தடுக்க வந்த போது அவரை கோபால்சாமி மற்றும் முத்துலட்சுமி தாக்கினார்கள் என்று சொல்லியுள்ள நிலையில், மதியம் 2-3 மணிவரை சம்பவம் நடந்துள்ளது என்று சொல்லியுள்ள விவரம் வழக்கை பாதிப்பதாக அமைந்துள்ளது. அ.சா.1 மற்றும் அ.சா.2 தரப்பில் 1ம் எதிரி அந்த சம்பவம் சம்மந்தமான நிலத்தை கிரையம் வாங்கி இருந்தார் என்று மிகத் தெளிவாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அந்த நிலம் சம்பந்தமான உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில், அந்த நிலத்தில் உரிமை மற்றும் அனுபவம் சம்பந்தமான ஆவண விவரங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து அ.சா.1, அ.சா.2 ஆகியோர்கள் எந்தவித சாட்சியமும் அளிக்காமல் இருப்பதும், எந்தவித ஆவணத்தையும் புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைக்காமல் இருப்பதும் இந்த வழக்கில் ஒரு தகுநிலை சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

17. ஏற்கனவே அ.சா.1 தரப்புக்கும், 1ம் எதிரி தரப்புக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையிலிருந்து வருகிறது என்பது தெளிவாக இருக்கும் காரணத்தினால், மேற்சொன்ன சம்பவயிடத்திற்கு வந்த பிறநபர்கள் பற்றிய விவரம், சம்பவம் நடந்து முடிந்த நேரம் குறித்த விவரம் அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியத்தில் இயற்கையானதாகவும், தொடர்ச்சியாகவும் இல்லை என்றும், நம்பும் படியாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே அ.சா.1, அ.சா.2க்கு இந்த வழக்கில் சொல்லியுள்ள காயங்கள் இந்த எதிரிகளால்தான் ஏற்படுத்தப்பட்டது என்பது எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே, 1, 2 எதிரிகளுக்கு எதிரான இ.த.ச பிரிவு 323ன் கீழான குற்றச்சாட்டுக்கள் எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

18. அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் தன்னை அசிங்கமாக பேசினார்கள் என்று எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. அ.சா.2 தனது சாட்சியத்தில், கோத்தா, அவளே, இவளே, அத மூடுடி என்று திட்டினார் என்று சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 புகார்தாரராக இருந்து அ.சா.1 உடன் சண்டை நடந்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 அசிங்கமாக பேசினார்கள் என்று எந்தவித சாட்சியமும் அளிக்காத விபரம் இ.த.ச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டின் நிரூபணத்தை பாதிப்பதாக அமைகிறது. எனவே, 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான பிரிவு இ.த.ச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று எந்த சாட்சியமும் முன்வைக்காத காரணத்தினால் 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிரான பிரிவு இ.த.ச பிரிவு 506(1)ன் கீழான குற்றச்சாட்டு எல்லா தகுநிலை சந்தேகத்திற்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. மேற்சொன்ன விவாதம் காரணங்கள் மற்றும் பரிசீலனையை பார்க்கும் போது அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323(2 எண்ணிக்கை), 506(1)ன் கீழும், 2ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழும், 3ம் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழும் உள்ள குற்றச்சாட்டுக்கள் எல்லா தகுநிலை ஐயப்பாட்டுக்கும் அப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, 1, 2, 3 எதிரிகளை குற்றவாளிகள் இல்லை என்று கண்டறிகிறது.

21. முடிவில், 1ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323(2 எண்ணிக்கை), 506(1)ன் கீழும், 2ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழும், 3ம் எதிரி இதச பிரிவுகள் 294(பி), 506(1)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து 1, 2, 3 எதிரிகளை குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**<u>22. வழக்குச் சொத்து</u> –**

இந்த வழக்கில் வழக்குச்சொத்துக்கள் எதுவும் கைப்பற்றி தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜூலை திங்கள் 22ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 20:09:50 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் –</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | அய்யன்சாமி |
| அ.சா.2 | பூமதி |
| அ.சா.3 | மயில்சாமி |
| அ.சா.4 | மருத்துவர் முகைதீன் நவ்சாத் |
| அ.சா.5 | ரஞ்சித்குமார் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் –</u>**

Judicial Form No.68

| SL. No | Description to the exhibit and its date | Date, when the exhibit was filed in the case | How marked | By whom filed | remarks |
|---|---|---|---|---|---|
| 1 | புகார் வாக்குமூலம் | 22.10.2018 | அ.சா.ஆ.1 | அ.சா.1 | அசல் |
| 2 | பார்வை மகஜர் | 22.10.2018 | அ.சா.ஆ.2 | அ.சா.3 | அசல் |
| 3 | பூமதி என்பவரின் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று | 22.10.2018 | அ.சா.ஆ.3 | அ.சா.5 | அசல் |
| 4 | அய்யன்சாமி என்பவரின் விபத்து பதிவேடு உ/இ காயச்சான்று | 22.10.2018 | அ.சா.ஆ.4 | அ.சா.5 | அசல் |
| 5 | முதல் தகவலறிக்கை | 22.10.2018 | அ.சா.ஆ.5 | அ.சா.5 | அசல் |
| 6 | மாதிரி வரைபடம் | 22.10.2018 | அ.சா.ஆ.6 | அ.சா.5 | அசல் |

**<u>அரசு தரப்பு சான்றுப்பொருள்</u> –** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப்பொருள்</u> –** இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 20:09:57 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**<u>குறிப்பு</u> :–**

1. எதிரிகள் விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. தீர்ப்பு குறித்து காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.
3. அரசு வழக்கறிஞருக்கு தீர்ப்பு நகல் வழங்கப்பட்டது.
4. சாட்சிகளை மூன்று நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

Judicial Form No.60

CALENDAR AND JUDGMENT

(For use in cases whether there are more accused persons than one)

District of Palani

Calendar of cases tried by the Judicial Magistrate of Palani.

<table>
<tr><td colspan="9">Date of Judgment : 22.07.2026</td><td rowspan="2">Explanation of delay and remarks</td></tr>
<tr><th>Offence</th><th>Report of complaint</th><th>Apprehension of accused</th><th>Released on Bail</th><th>Commencement of trial</th><th>Close of trial</th><th>Sentence or order</th><th colspan="2"></th></tr>
<tr><td>22.10.2018</td><td>22.10.2018</td><td>A1 on 22.10.2018</td><td>A1 on 02.11.2018 Anticipatory bail for A2 and A3 on 20.11.2018</td><td>23.12.2020</td><td>09.07.2026</td><td>22.07.2026</td><td>F.I.R. Date:<br>Charge Sheet Date:<br>D.O.P.<br>D.O.F.</td><td>22.10.2018<br>30.01.2019<br>14.11.2019<br>02.12.2019</td><td>Complainant side evidence till 06.07.2026</td></tr>
</table>

Judgment in CC 190/2019 on the file of the Judicial Magistrate of Palani.

Complainant: The Sub-Inspector of Police, Taluk P.S in Cr.No.580/2018

| Name of the Accused | Age | Fathers/Husband's Name |
|---|---|---|
| Gopalsamy | 62/2018 | S/o.Sangarappagounder |
| Arun | 33/2018 | S/o.Gopalsamy |
| Muthulakshmi | 53/2018 | W/o.Gopalsamy |

| Caste or Religion | Calling | Residence | Taluk |
|---|---|---|---|
| Hindu | -- | Ponnapuram | Palani |
| Hindu | -- | Ponnapuram | Palani |
| Hindu | -- | Ponnapuram | Palani |

Offence : U/s 294(b), 323, 506(1) IPC

Sentence : A1 was found not guilty from the charges U/s. 294(b), 323 (2 counts), 506(1) IPC, A2 was found not guilty from the charges U/s. 294(b), 323, 506(1) IPC, A3 was found not guilty from the charges U/s. 294(b), 506(1) IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.22 20:10:05 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

Judicial Form No.61

(See Rule 106)

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE COURT, PALANI

JUDGMENT IN CC 190 OF 2019

ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE, PALANI

Complainant : Sub-Inspector of Police, Palani Taluk PS.

Accused : 1) Gopalsamy and 2 others

Offence : 294(b), 323, 506(1) IPC

**Finding** : A1, A2, A3 were found not guilty

**Sentence** : A1 was found not guilty from the charges U/s. 294(b), 323 (2 counts), 506(1) IPC, A2 was found not guilty from the charges U/s. 294(b), 323, 506(1) IPC, A3 was found not guilty from the charges U/s. 294(b), 506(1) IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

**Property** : NIL

| Sl. No | Description of the accused | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | Name | Father name | Caste or race | Occupation | Residence | Age |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | Gopalsamy | S/o.Sangarappagounder | Hindu | - | Palani | 62/2018 |
| 2 | Arun | S/o.Gopalsamy | Hindu | - | Palani | 33/2018 |
| 3 | Muthulakshmi | W/o.Gopalsamy | Hindu | - | Palani | 53/2018 |

| Date of | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commencement of trail | Close of trail | Sentence or order |
| (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 22.10.2018 | 22.10.2018 | A1 on 22.10.2018 | A1 on 02.11.2018 Anticipatory bail for A2 and A3 on 20.11.2018 | 23.12.2020 | 09.07.2026 | 22.07.2026 |

| Explanation of delay |
|---|
| (15) |
| Complainant side evidence till 06.07.2026 |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 20:10:11 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**Case Summary in CC 190/2019**

| S. No | Description | Remarks |
|---|---|---|
| 1 | The Period of Remand of the Accused/Surrender | A1 on 22.10.2018 |
| 2 | Date of filing of the Complaint/Final Report in the Court | 30.01.2019 |
| | The date of Commital of the Case to the court of session | Not applicable |
| 4 | First Questioning u/s 240 of crpc | 23.12.2020 |
| 5 | Filling of Miscellaneous petition and result | Nil |
| 6 | Date of Examination in chief and Cross examination of witness. | <table><tr><th>Witness</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>PW1</td><td>12.08.2024</td><td>12.08.2024</td></tr><tr><td>PW2</td><td>12.08.2024</td><td>12.08.2024</td></tr><tr><td>PW3</td><td>12.08.2024</td><td>12.08.2024</td></tr><tr><td>PW4</td><td>18.02.2026</td><td>18.02.2026</td></tr><tr><td>PW5</td><td>06.07.2026</td><td>06.07.2026</td></tr></table> |
| 7 | NBW Issued date | NIL |
| 8 | NBW recalled | NIL |
| 9 | Questionings u/s 313(i)(b) of Cr.P.C. | 09.07.2026 |
| 10 | Details of Abscondence of an accused and his appearance/production | NIL |
| 11 | Grant of stay by superior courts and the results there of | NIL |

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 20:10:16 +0530

**Judicial Magistrate,**
**Palani.**

**C.C No.190/2019**
**Date : 22.07.2026**

A1, A2, A3 Present. Judgment pronounced in Open Court.

A1 was found not guilty from the charges U/s. 294(b), 323 (2 counts), 506(1) IPC, A2 was found not guilty from the charges U/s. 294(b), 323, 506(1) IPC, A3 was found not guilty from the charges U/s. 294(b), 506(1) IPC and the accused were acquitted U/s.248(1) of Crpc.,

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.07.22 20:10:20 +0530

**Judicial Magistrate,**
**Palani.**